**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 183/2024 P.W.9/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஷாஜி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.10.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கருங்கல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 19-12-2023 ம் தேதி உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி தேரைக்கால் புதூர் திரவியம் மருத்துவமனை சென்று அங்கு சிகிக்சையில் இருந்த அசோக் டார்வின் என்பவரை விசாரித்து, அவர் புகார் மனுவை பெற்று நிலையம் 19.00 மணிக்கு வந்து புகார் மனுவின் தன்மைப்படி கருங்கல் காவல்நிலையக்குற்ற எண். 352/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

1. ஆய்வாளர் உத்தரவின்படி தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவத்தன்று காயம்பட்ட நபர் அவரது மனைவியுடன் வந்து எங்கள் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தார் என்றால் இல்லை.

2. 18-12-2023 அன்று நான் கருங்கல் காவல்நிலையத்தில் பணியில் இருந்தேனா என்றால் ஆம். நான் எனது பணியை செய்வதற்கு நாட்குறிப்பு உண்டு என்றால் சரிதான். அதுபோல் பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் புகார் வாக்குமூலம் பெற்று நேரடியாக காவல்

நிலையம் வந்தேன் என்றால் சரிதான். தேரைக்கால் புதூரில் இருந்து கருங்கல் காவல் நிலையத்திற்கு 1மணி நேரத்திற்கு வந்துவிடலாமா என்றால் கூடுதல் நேரம் ஆகும். நான் நிலையத்திற்கு சுமார் 3.30 மணிக்கு வந்திருப்பேன் என்றால் சரிதான். 7 மணிக்கு தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. என் மேல் அதிகாரி உத்தரவின்படி 7 மணிக்கு தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கொள்தகு குற்றம் என்றால் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் கண் உற்ற சாட்சியாக யாரும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு எதுவும் பெறவில்லை என்றாலும் அதனை தொடர்ந்து சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.